04175 - 236654 / 235295 73396 61717

SHANMUGA INDUSTRIES
ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Accredited with "B+" GRADE by NAAC
Certified Under Section 2 (f) & 12 B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution
Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, New Delhi
Manalurpet Road, Tiruvannamalai - 606 603, shanmugacollege@gmail.com www.shanmugacollege.edu.in

சண்முகா கல்லூரியில்
போதைப்பொருள் விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்பு

தமிழக அரசு வழிகாட்டுதலின்படி, திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியின் போதைப்பொருள் எதிர்ப்புக்குழு மற்றும் நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் IQAC ஆகியன இணைந்து போதைப்பழக்கத்திற்கு எதிரான பெருந்திரள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்விற்குக் கல்லூரியின் தலைவர் **எம்.என்.பழனி** தலைமை வகித்தார். செயலர் மற்றும் தாளாளர் **எல்.விஜய் ஆனந்த்** முன்னிலை வகித்தார். முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** உறுதிமொழி வாசித்தார். பொருளாளர் **எ.ஸ்ரீதர்,** துணை முதல்வர் முனைவர் **கோ.அண்ணாமலை** ஆகியோர் கலந்துகொண்டனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக போதைப்பொருளுக்கு எதிராகப் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளைச் சிறப்பாகச் செய்துவருதைப் பாராட்டி மாவட்ட அளவில் **மூன்றாம் பரிசாக ரூ.5000 -மும், பாராட்டு சான்றிதழும்** தமிழக அரசின் சார்பில் கல்லூரிக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் சிறப்பு உதவிக் காவல் ஆய்வாளர் **தட்சிணாமூர்த்தி** கலந்து கொண்டு மாணவர்களிடையே போதைப் பழக்கத்தினால் ஏற்படும் விளைவுகளையும் போதைப் பொருட்களினால் ஏற்படும் தீமைகளைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். அதனைத் தொடர்ந்து, போதைப் பழக்கத்திற்கு எதிரான எதிர்ப்பு பெருந்திரள் உறுதிமொழி எடுக்கப்பட்டது. இதில் 3000 -திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் உறுதிமொழியை ஏற்றனர்.

இதற்கான ஏற்பாட்டினை, கல்லூரியின் போதைப் பொருள் எதிர்ப்புக்குழு ஒருங்கிணைப்பாளரும், கணினி பயன்பாட்டியல் துறைத்தலைவருமான **பேரா.வ.சக்திவேல்,** கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் **பேரா.த.அருண்குமார், பேரா.த.ஆனந்தன்** மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் செய்திருந்தனர்.

செயலர் மற்றும் தாளாளர்


SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE
ANTI - DRUG CLUB